# DEPOSITION OF WITNESS

# IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, SALEM.

Sessions Case No.43/2023

Deposition of witness – PW7

| | | | |
|---|---|---|---|
| Name | : மணி | Caste | : |
| S/o. | : வையாபுரி | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed on 27.11.2025 in accordance with the provisions of Oaths Act No.44 of 1969.

Accused present.

முதல் விசாரணை;

நான் மல்லியகரையில் குடியிருக்கிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்குத் தெரியும். 2022ம் வருடம் ஒரு நாள் நான் மல்லியகரை காவல்நிலையத்திற்கு சொந்த வேலையாக சென்றபோது போலிசார் என்னிடம் கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள். அதில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் எனக்குத் தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையதுதான். மேற்படி எனது கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.4 ஆகும்.

அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரி, குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்பட்டது.

அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை :

போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும் அந்த விசாரணையின்போது 12.12.2022ம் தேதி காலை 9.30 மணிக்கு மல்லியகரை சந்தைபேட்டை அருகே நான் இருந்தபோது அங்கு வந்த போலிசார் எதிரி செல்வகுமாரை அவரது வீட்டின் முன்பு காவல்படுத்தி உள்ளதாகவும் வழக்கில் சம்மந்தப்பட்ட ரீப்பர் கட்டை ஒன்றை அவர் ஆஜர்படுத்துவதாகவும் சொன்னதன் பேரில் என்னையும் சீலியம்பட்டியை சார்ந்த சக்திவேல் என்பவரும் சாட்சிகளாக முன்னிறுத்தி போலிசார் 10.15 மணிக்கு சம்பவ இடத்திலிருந்து ரீப்பர் கட்டை ஒன்றை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார்கள் என்றும் அந்த கைப்பற்றுதல் மகசரில் நானும் சக்திவேலும் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றும் வாக்குமூலம் அளித்துவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை.

Sd/- S.Sumathy,

Principal Sessions Judge, Salem.